End time Warriors

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS Battle 01 - Field 10 - February 2023

## எதிர்த்து நில்





# முதல் வரிகள்...

**கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**

இந்த வருடத்தின் இரண்டாம் மாதத்தை, நம்மை காணச் செய்த தேவாதி தேவனை துதிக்கிறேன். இந்த வருடத்தின் துவக்கம் முதலே, கர்த்தர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின் படி, நம்மை நடத்த ஆரம்பித்திருக்கிறார். குறிப்பாக, கடந்த மாதம் 16 மற்றும் 17 ஆம் தேதிகளில், செம்பட்டியில் வைத்து நடைபெற்ற வருடாந்திர தரிசனக் கூடுகையில் தேவன் மகிமையாக வெளிப்பட்டார். அநேக குடும்பங்கள், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கலந்து கொண்டனர். இந்த 2023 ஆம் ஆண்டின் வாக்குத்தத்தமான ஏசாயா.27:6ன் படி, **“யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்”** வந்திருந்த அநேகர் தேவ சித்தத்தை அறிந்தவர்களாக கடந்து சென்றனர். மேலும், அநேக மாவட்டங்களிலிருந்து வந்திருந்தவர்கள், தங்களுடைய மாவட்டத்தில் கர்த்தருக்காக செய்ய வேண்டியதை திட்டமிட்டு கடந்து சென்றது ஆசீர்வாதமாக இருந்தது.

தேவனுடைய சமூகத்தில் காத்திருந்து ஜெபிக்கிறவர்கள் தங்களுக்கானவைகளை அல்ல, தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக திட்டமிடவும் செயல்படவும் ஆரம்பித்து விட்டார்கள் என்பதை இந்த ஆண்டு நடைபெற்ற வருடாந்திர கூடுகைகள் மூலமாக புரிந்து கொள்ள முடிந்தது. ஏனென்றால், காலங்களை நிதானிக்க தெரிந்தவர்களால் மாத்திரமே, இது கடைசிக் கால ஓட்டம் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஆகவே, நாம் சந்திக்கும் ஒவ்வொரு வாலிபர்களையும் கர்த்தரண்டை நடத்த வேண்டிய காலக்கட்டத்தில் கடந்து வந்திருக்கிறோம். எனவே இந்த மாபெரும் தரிசனத்திலே, நாம் சந்திக்கும் ஒவ்வொரு சபைகளிலும் உள்ள வாலிபர்கள் ஒரு சேனையாய் எழும்ப, நீங்கள் அதிகமாக ஜெபித்து கொள்ளுங்கள். மேலும், இந்த புதிய வருடத்தில் அநேக மாவட்டங்கள், மற்றும் மாநிலங்களுக்குள்ளாக செல்ல திட்டமிட்டிருக்கிறோம். உங்கள் ஜெபங்களில் எங்களை அதிகமாக நினைத்துக் கொள்ளுங்கள்.

**தேவ கிருபை உங்களோடிருப்பதாக...**

**யுத்த களத்தில் உங்களோடு,**

R. **சாலமோன்.**

END TIME WARRIORS




கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். அன்றாட வாழ்க்கையில் நாம் கேள்விப்படும் ஒவ்வொரு நிகழ்வும், "இதோ நான் வாசற்படியில் நிற்கிறேன்" என்ற கர்த்தரின் வார்த்தைகளை நமக்கு நியாபகப்படுத்துகிறது. தனக்கு கொஞ்ச காலம் மாத்திரமே உண்டென்பதை பிசாசு அறிந்தபடியினால்,தேவனுக்கு விரோதமாக வாலிபர்களை திருப்புவதன் மூலம், தன்னுடைய இராஜ்ஜியத்தை இந்த உலகத்தில் நிலையாக ஸ்தாபித்து, தேவதிட்டத்தை,தன்னுடைய வாழ்க்கையில் அறிந்து கொள்ள முடியாத வாலிபர்களை திரளாய் எழுப்பவும், பிசாசு தீவீரம் காட்டி வருகிறான். ஆனால், இப்படிப்பட்ட பிசாசின் கிரியைகளுக்கு எதிர்த்து நிற்கிற வாலிபர்களை கர்த்தருடைய கண்கள் தேடிக் கொண்டிருக்கிறது.

இப்போது, நம் உள்ளத்தில் எழும் முதலாவது கேள்வி, 'பிசாசுக்கு எப்படி எதிர்த்து நிற்பது'. பிசாசுக்கு எதிர்த்து நிற்பதற்கு முன்பாக, அவனுடைய தந்திரங்களை அறிந்து கொள்வது அவசியம்.'தந்திரங்கள்' என்ற உடனே நம் நினைவுக்கு வருவது, 'இதை எப்படி அறிந்து கொள்வது'. வேதத்தில் அழகான ஒரு வார்த்தை உண்டு, "பிசாசின் தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே". அப்படியென்றால்,இது அறியக்கூடியதொன்று என்று புலப்படுகிறது. முதலாவது நாம் அறிந்து கொள்ள வேண்டியது, 'பிசாசு வாலிபர்களை அடிமைப்படுத்த விரும்புகிறான்'. இன்றைக்கு உலகத்தில் பலவிதமான அடிமைத்தனங்கள் காணப்படுகிறது. அதில், திரைப்படங்களை பார்ப்பதும், அதிலுள்ள வசனங்களை status-ல் வைப்பதும், தவறான உறவுகள் என்று தெரிந்தும், அவற்றை பின் தொடர்வதும், நேரத்தை அதிகமாக திருடும் சமூக ஊடகங்கள், மற்றும் Games இவற்றில் நாள்தோறும் மூழ்கி இருப்பதும், போதை பொருட்களை கௌரவத்திற்காக பயன்படுத்தி, பின்பு அதிலிருந்து வெளியேற முடியாதபடி திகைத்து நிற்கச் செய்வதும், நண்பர்கள் என்ற குடையின் கீழ், வரம்பு மீறும் வார்த்தைகள், இவைகளெல்லாம் பிசாசின் தந்திரங்கள். இந்த அடிமைத்தனத்தில் உன்னை சிக்க வைக்க, சில தந்திரமான காரியங்களை அவன் ஒவ்வொரு நாளும் நடப்பிக்கிறான். இன்னும், சற்று ஆழமாக யோசித்தால், தெரிந்தோ தெரியாமலோ, ஏதோ ஒரு காரியத்தில் நாம் அடிமைப்பட்டிருக்க கூடும். உண்மை என்னவென்றால், அதை அறியாதபடிக்கு நம்முடைய வாழ்க்கை நகர்ந்து கொண்டே இருக்கும். மேலும், செய்த தவறை திருத்திக் கொள்ள, நீ முயலும் ஒவ்வொரு தருணங்களிலும், அந்த தவறை தொடர்ந்து செய்ய வைப்பதற்கான தந்திரங்களை, ஒவ்வொரு நாளும் பிசாசு உனக்கு முன்பாக முன்னெடுத்து வைக்கிறான். இப்படிப்பட்ட காரியங்களுக்கு நீ எதிர்த்து நிற்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். தவறு என்று கர்த்தர் வெளிப்படுத்தின காரியங்களுக்கு, அல்லது தவறான காரியங்களை செய்ய, உனக்கு வரும் சோதனைகளுக்கு, நீ முற்றுப்புள்ளி வைப்பதே "பிசாசுக்கு நீ எதிர்த்து நிற்பதாகும்".

எபே.6:11,ல் பிசாசுக்கு எதிர்த்து நிற்க சொல்லுகிற கர்த்தருடைய வார்த்தை, தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களை தரிப்பித்துக் கொள்ளுவதற்கான ஆலோசனையையும் நமக்கு வழங்குகிறது. அதேபோல, வெளி.12:11ல் வேதம் தெளிவாய் நமக்கு சொல்லுகிற காரியம், கர்த்தருடைய வசனத்தினால் பிசாசை ஜெயிப்பதற்கான வழிமுறை. எனவே, அநேக நேரங்களில், வேதத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் பிசாசு நம்மை விடுவதில்லை. ஏனென்றால், நீ கர்த்தருடைய வேதத்தை தியானிக்கவும், அவருடைய சமூகத்தை தேடவும் தொடங்கி விட்டால், பிசாசை எதிர்க்கிறவனாக மாத்திரமல்ல, அவனுடைய ராஜ்யத்துக்கு பெரும் அச்சுறுத்தலாய் நீ மாறி விடுவாய் என்பது அவனுக்கு தெரியும். எனவே வாலிப தம்பி/தங்கச்சி, நீ வாசிக்கும் ஒவ்வொரு கர்த்தருடைய வார்த்தையும், ஆவியின் பட்டயம் என்பதை மறந்து போகாதே. அவை உன்னை பிசாசின் தந்திரங்களிலிருந்து தற்காத்து கொள்ளவும், அவனுடைய திட்டங்களை உடைத்தெறியவும் உதவும். மேலும், பிசாசின் தந்திரங்களுக்கும், அவனுடைய சூழ்ச்சிக்கும் எதிராக, கர்த்தர் உன்னை ஒரு பட்டயமாய், இந்த கடைசி நாட்களில் உபயோகிக்கவிரும்புகிறார்.

**அன்பின் பிதாவே, தங்களுடைய வாழ்க்கையில் கடந்து வந்த, ஒவ்வொரு பரீட்சையிலும் தோற்றுப்போய், இன்றைக்கு ஜெயமுள்ள வாழ்க்கைக்காக தங்களை அர்ப்பணிக்கும் இவர்களை உம்முடைய கரத்தில் ஒப்புக் கொடுக்கிறேன். என்னை நிற்கப்பண்ணும் என்று உம்மிடத்தில் ஜெபிக்கிற ஒவ்வொருவரையும், நீர் பெலப்படுத்தி, ஜெயமுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்தருளும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.**

# ஜெபியுங்கள்

## 1ம் வார

### ஜெபக்குறிப்புகள்...



பரவி வருகிற புதிய வகை கொள்ளைநோய் சீக்கிரத்தில் கட்டுக்குள் வர, எந்த விதமான உயிர் பலிகளும் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.



நம் தேசத்தை ஆளுகை செய்யும் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு கர்த்தர் நல்ல ஞானத்தை அருளும்படியாய் ஜெபிப்போம்.

நம் தேசத்தில் விபத்துக்களினால் அனுதினமும் அநேகர் மரிக்கின்றனர். இப்படிப்பட்ட மரணங்கள் இனி தடுக்கப்பட நல்ல பாதுகாவலை கர்த்தர் அருளும்படியாய் ஜெபிப்போம்.



போதை வஸ்துக்களுக்கு அடிமைப்பட்டிருக்கிற வாலிபர்கள் மீட்கப்பட, பூரண விடுதலையை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 2ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

தவறான படங்களுக்கு அடிமைப்பட்டுள்ள இளம்சிறார்கள் அதிலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.

அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியினால் நம் தேசத்தை சார்ந்த அநேகர் வேலை இழக்கும் அபாயம் எழுந்துள்ளது. அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகளுக்கு நம் தேசம் தப்ப ஜெபிப்போம்.



பூரண மதுவிலக்கு நம் தேசத்தில் எல்லா மாநிலங்களிலும் அமல்ப்படுத்தப்பட ஜெபிப்போம்.

ஜாதி வேறுபாடுகளினால் பிரிவினைகளில் சிக்கி உள்ள நம் ஜனங்கள் அத்தகைய எண்ணங்களில் இருந்து விடுதலைபெற ஜெபிப்போம்.

## 3ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

வலைதள விளையாட்டுகளுக்கு அடிமைப்பட்டுள்ள இளம் வாலிபர்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.

கடந்த ஆண்டில் மட்டும் 77,315 குழந்தைகள் நம் தேசத்தில் கடத்தப்பட்டுள்ளனர். இப்படிப்பட்ட கடத்தல்கள் இனி நடக்காதபடி கர்த்தர் காத்துக்கொள்ளும்படி ஜெபிப்போம்.



ஊழல் மற்றும் இலஞ்சத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரசு அலுவலகங்களில் இனி அப்படிப்பட்ட அவலங்கள் நடக்காதவாறு ஜெபிப்போம்.

சுவிசேஷ இயக்கங்கள் தீவிரமடையவும், வெகு விரைவில் நம் இந்திய தேசம் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

## 4ம் வார

### ஜெபக்குறிப்புகள்...

வலைதள சூதாட்டங்களில் சிக்கி பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மீட்கப்பட ஜெபிப்போம்.

பெண்களுக்கு விரோதமாய் நடக்கிற வன்முறை சம்பவங்கள் முற்றிலும் தடுக்கப்பட ஜெபிப்போம்.

திருச்சபைகளுக்குள் உள்ள குடும்பங்கள் எழுப்புதல் அக்கினியை பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

நம் பாரத தேசத்தில் 25% க்கும் அதிமானோர் நாளொன்றுக்கு ஒரு வேளை உணவு கூட உண்ணமுடியாத வறுமையில் உள்ளனர். இந்த நிலை மாற ஜெபிப்போம்.





# True Soldier

இருளில் இருக்கும் ஜனங்களை ஒளியின் ராஜ்யத்துக்கு கொண்டு வர தேவனுடைய படையில் யுத்த வீரர்களாய் நிற்கும் ஒவ்வொரு சேனைகளுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

## சாத்தானுக்கு சவால் விடும் யுத்த சேனையே!

தேவனால் அழைக்கப்பட்டு பிரித்தெடுக்கப்பட்டவர்கள், ஒரு உன்னதமான பலம் வாய்ந்த சேனையாய் நிற்பதற்கு ஆயத்தம் அல்லது பயிற்சி மிக அவசியம். இந்தப் பகுதியிலும் நம் யுத்த தளபதியாம் இயேசு கிறிஸ்து நமக்கு கற்றுக் கொடுக்கப் போகும் ஆயத்தம் **"ஒரு உண்மை போர்ச்சேவகன் பலமுள்ளவனாக இருக்க வேண்டும்".** ***" A True Warrior must be Strong ".*** மாம்சத்தில் கொண்டிருக்கும் சரீர அல்ல, ஆவியானவரின் பெலத்தைப் பெற்றுக் கொண்டு சாத்தானை எதிர்த்து முறியடிக்கும் சேனையே! பலமுள்ள சேனையே! இதை வாசிக்கிற நீயே அந்த சேனை!... ஒவ்வொரு போர்ச் சேவர்களும் பலமுள்ளவர்களாய் பராக்கிரமசாலிகளாய் இருக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

இ.எம். பவுண்ட்ஸ் என்ற தேவ மனிதர் இவ்வாறு குறிப்பிடுகிறார் "ஜெபிக்கிறவர்கள் இரும்பு மனிதராக இருக்க வேண்டும். சாத்தானை தாக்குவதற்கு முன் இவர்கள் சாத்தானால் தாக்கப்படுவார்கள்". என்று சொல்லியிருக்கிறார். எந்த ஒரு யுத்த வீரனும் யுத்தக் களத்தில் எதிரிரை எதிர்ப்பதற்கு முன் சிறந்த தற்காப்புகளோடு, ஆயத்தத்தோடு பலம் வாய்ந்தவனாய் நிற்பான். யுத்த வீரர்களான நாமும் அனுதினமும் ஆண்டவரின் சமூகத்தில் காத்திருந்து தேவனிடத்திலிருந்து வரும் பலத்தால் நிரம்பினவர்களாக காணப்பட வேண்டும். ஆபிரகாம் எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறவனாக காணப்பட்டான். அழியப்போகும் சோதோம் பட்டணத்திற்காக, அந்த ஜனங்களுக்காக திறப்பிலே நிற்கிறான். பரிந்துப் பேசி ஜெபிக்கிறான். அதனால் நீதிமான் காக்கப்படுகிறான்.

யோசுவா... ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதவன். கர்த்தரால் அழைப்பைப் பெற்றவன். அவன் தேவ பிரசன்னத்தில் காத்திருந்ததின் பெலனால் இஸ்ரவேல் ஜனங்களை தேவ வழி நடத்துதலின்படி நடத்துகிறான். யோர்தான் வருகிறது... விசுவாசத்துடன் உறுதியாக ஆழத்தில் பெலத்தோடு கால் வைக்கிறார்கள்... வழி திறக்கிறது. எரிகோவை அவரின் வழிநடத்துதலால் ஏழு நாட்கள் சுற்றி வருகிறார்கள், ஏழாம் முறை எரிகோவின் மதில் தகர்க்கப்படுகிறது.

இதை வாசிக்கிற யுத்த வீரர்களே!... நீங்களும் கேள்வி கேட்காமல் கர்த்தர் சமூகத்தில் காத்திருக்கிறவர்களாய், தன் சொந்த பலத்தை நம்பாமல், தேவ பலத்தைச் சார்ந்திருக்கிறவர்களாய் யோசுவா, ஆபிரகாம், கிதியோனைப் போல பராக்கிரமசாலிகளாய் யுத்தம் புரிய அர்ப்பணிப்பீர்களா?

தேவனும் தம் யுத்த சேனையில் இணைந்துக்கொள்ளும் எந்த ஒரு வீரனையும் பராக்கிரமசாலிகளாகவும், தைரியமுள்ளவர்களாகவும், பலவான்களாகவும் இருந்து யுத்தம் புரிய எதிர்பார்க்கிறார்.

*பலமுள்ளவர்களாய் சாத்தானை ஜெயிக்க*
*நாமும் ஜெபிக்கும் இரும்பு மனிதர்களாக மாற ஒப்புக்கொடுப்போம், சுதந்தரிப்போம்!*

- Daisy Solomon




# SORROW & GRIEF

"that I have great sorrow and continual grief in my heart."

*Romans 9:2*

We live in a time when we don't have time for others saying that "we ourselves got so many things on our shoulders!" Let's imagine how often we pray for the perishing souls in our country. Our country is the second largest in accordance with the population. How many of them have a personal relationship with Jesus Christ? How many of them got saved? A billion-dollar question!

Paul is anguishing about the fact that the Israelites rejected Jesus! He himself was against Jesus until the day that Jesus intervened in his life. After knowing Christ personally, he has started proclaiming His glory everywhere. Nonetheless, his heart was always troubled by Israelites who refused to accept Jesus!It is expressed in **Romans 9:3** ***"For I could wish that I myself were accursed from Christ for my brethren, my countrymen according to the flesh,"***

Let's throwback to an ancient timewhen Moses pleaded with God for his people. When the people saw that Moses delayed coming down from the mountain, Israelites made a golden calf (Exodus 32:4) and said that "This is your god, O Israel, that brought you out of the land of Egypt!" The bible says from **Exodus 32: 7-10** *"And the Lord said to Moses, "Go, get down! For your people whom you brought out of the land of Egypt have corrupted themselves. They have turned aside quickly out of the way which I commanded them. They have made themselves a molded calf, and worshiped it and sacrificed to it, and said, This is your god, O Israel, that brought you out of the land of Egypt!'" And the Lord said to Moses, "I have seen this people, and indeed it is astiff-necked people! Now therefore, let Me alone, that My wrath may burn hot against them and I may consume them. And I will make of you a great nation."*If God had said the same thing to us, we would have said, "Yes, Lord! These guys deserve to die." But Moses was deeply concerned about them and pleaded with God not to destroy them (Exodus 32: 11-13). And the bible says in **Exo 32:14** *"So the Lord relented from the harm which He said He would do to His people."* Moses went to an extend that he might sacrifice his eternal life to save his people which is written in **Exodus 32:32** *"Yet now, if You will forgive their sin—but if not, I pray, blot me out of Your book which You have written."*

Mary, Queen of Scots, a devout Catholic, is said to have said, "I fear the prayers of John Knox more than all the assembled armies of Europe." Why do you think the Queen said this? Because she witnessed the power of Knox's prayer. His renowned prayer was "Give me Scotland or I die." Knox lived in a time when being a Christian was often extremely dangerous.Let us begin to bear the burden for the perishing souls! Our India must be saved. To accomplish this, we must begin sharing the Gospel with our families, friends, neighbours, and relatives. Eventually, God will use us in a powerful way. Who else would bother the perishing souls of this country if you and I (saved Christians) don't? Are we still waiting for people like Dr. Graham Staines, an Australian missionary, to come to India and serve?

### Promising verse:

Philippians 2.5 (KJV): *"Let this mind be in you, which was also in Christ Jesus"*

***If God is speaking to you right now, I'd like you to kneel and say this small prayer with me:***

Dear Heavenly Father, You have been so lovely and merciful to us! You sent your own Son, Jesus, to die on the cross for our salvation. We had so many forerunners from all over the world who lived and died for their countries. Forgive our shortcomings! Please give us the burden for the perishing souls. Give us the mind of Christ, who died for us while we were yet sinners! I completely surrender myself to you to do your will. In Jesus' name, I pray. Amen!


- Manoj Kumar



# பல தடைகளைத் தாண்டி கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களாய் உருவாகிக் கொண்டிருக்கும் வீரர்களுக்கு!!!

1CRORE

பசிபிக் கடலில் உள்ள நியு கினியா தீவிற்கு மிஷினரியாக சென்று துணிவுடன் கிறிஸ்துவை எடுத்துரைத்து, பழங்குடியின மக்களுக்கு உணவான James Chalmers-ஆல் இன்றைக்கு 95% பழங்குடியின ஜனங்கள் கிறிஸ்துவை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிற தீவாக மாறியுள்ளது என்பது தான் உண்மை. இவரை குறித்த ஒரு சில காரியங்களை மாத்ரம் பார்ப்போம்



இவர் 1841 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4 ம் தேதி Scotland தேசத்தில் கல்சிற்ப ஆசாரியின் மகனாக பிறந்தார். 18 ம் வயதில் அவர் ஊரில் நடந்த எழுப்புதல் கூட்டத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு, பட்ட படிப்புகளை முடித்து, 26ம் வயதில் மிஷினரியாக பணியாற்ற ஆரம்பித்தார்.

முதலாவது Rarotonga என்ற தீவிற்கு சென்று அங்குள்ள மொழியைக் கற்றுக்கொண்டு சுமார் 10 வருடங்கள் அந்த ஜனங்கள் மத்தியில் கிறிஸ்துவின் அன்பை எடுத்துரைத்தார். இருளின் ஆதிக்கத்தில் இருந்த அந்த தீவினர் மெய்யான ஒளியாகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

தனது 36ம் வயதில் நியு கினியா (New Guinea) தீவிற்கு அவரும் அவரின் மனைவியும் சென்றனர். மிகுந்த ஆபத்து நிறைந்த மனித மாமிசத்தை உண்ணும் அந்த தீவின் ஜனங்கள் மீது கரிசனை கொண்டவராய், தனது கையில் ஆயுதம் ஏதேனும் இருந்தால் வெளிநாட்டவர் அவர்களை தாக்க வந்ததாக நினைத்து ஓடுவார்கள், அல்லது தன்னை தாக்க வருவார்கள் ...... அதனால் கிறிஸ்துவை அறிவிக்க முடியாமல் போய்விடும் என்று நினைத்து வெறும் கையோடே செல்வாராம். 105 க்கும் மேற்பட்ட கிராம தீவுகளுக்கு சென்று கிறிஸ்துவை அறிவித்திருக்கிறாராம். 90 கிராம தீவுகளில் முதலாவது சென்ற வெள்ளை மனிதனும் இவரே.

1901-ம் ஆண்டு ஏப்ரல் 8 ம் தேதி கோரிபாரி (Goaribari) என்ற தீவிற்கு சென்ற முதல் நாள் அந்த பழங்குடியினர் தம்மை சூழ்ந்து கொள்ள முற்பட்டதால் அவ்விடம் விட்டு வெளியே வந்து விட்டார். மறுநாள் Easter தினத்தன்று ஆலய ஆராதனையை முடித்து விட்டு மீண்டும் அந்த தீவிற்கு இவரும் Oliver Tomkins என்ற மிஷினரியும் சென்றனர். இவர்களை உற்சாகமாகவும், அன்புடனும் வரவேற்ற அந்த தீவினர், தூபு என்று அழைக்கப்படும் கேளிக்கை குடிசைக்கு அழைத்து சென்றனர்.

அந்த இடத்தில் மனிதர்கள் சாகும் வரை அவர்களை சண்டையிட வைத்து பின்பு அவர்களை கொன்று சாப்பிடுவார்களாம். இதை அறியாத James & Oliver-ம் கிறிஸ்துவை அறிவித்த வண்ணமாக அந்த கேளிக்கை குடிசைக்கு அழைத்து செல்லப்பட்டு சில நிமிடங்களில் எந்த வித எச்சரிப்புமின்றி தாக்கப்பட்டனர். சில நிமிடத்தில் அவர்கள் உடல்கள் துண்டாக்கப்பட்டு அருகில் கொதித்து கொண்டிருந்த குழம்பில் போடப்பட்டது. இருவரும் அந்த தீவில் இரத்தசாட்சியாக மரித்தனர்.

James Chalmers அந்த தீவில் கிறிஸ்துவின் விதையாக மாறியதால், கோடிக்கணக்கான பழங்குடியினர் வாழும் அந்த தீவில் 95% ஜனங்கள் கிறிஸ்துவை ஆராதிக்கிற தீவாக மாறியுள்ளது.

கோதுமை மணியானது நிலத்திலே விழுந்து செத்ததேயாகில் அது மிகுந்த பலனை கொடுக்கும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் James Chalmers

கிறிஸ்துவிடம் நெருங்கி வரும் போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களைக் குறித்த வாஞ்சையே என்னை ஆட்கொள்கிறது James Chalmers

**இதை வாசிக்கிற கிறிஸ்துவின் போர்ச்சேவகர்களாகிய நாமும் அவருக்காக அநேக எதிர்ப்புகளை தாண்டியும், அதிலே அவருக்காக பிரகாசிக்கவும் ஆயத்தமா?**

- Priya



# Red Rose!


**அன்பு வாலிப தம்பி தங்கச்சி!**

எல்லாரும் சந்தோஷமா இருக்கிங்களா? உங்க எல்லாருக்கும் பூக்கள் என்றால் பிடிக்கும் தானே? இப்படி தான் Nelcy-னு ஒரு அக்கா இருந்தாங்க. அவங்களுக்கு flowers என்றால் ரொம்ப பிடிக்கும். சின்ன வயதில் இருந்தே நிறைய செடிகள் வளர்ந்து வந்தாங்க. அவங்களுக்கு ரொம்ப பிடிச்ச flower, "Red Rose" So எல்லா செடிகளையும்விட இந்த Red rose ஐ மட்டும் special care எடுத்து பாத்துப் பாங்க. எப்படி இயேசப்பா இந்த உலகத்துல இவ்வளவு அழகான, திறமையான மனிதர்கள் இருந்தாலும் நம்மை Choose பண்ணி special care எடுத்து பாத்துகிறாங்க அப்படி தான் இந்த Nelcy அக்காவும் பாத்துக்கிட்டாங்க.

ஒருநாள் ஒரு புயல் காற்று வேகமா வந்துசாம் அப்போ எல்லா செடிகளும் வேரோட பிடுங்கி எரியப்பட்டுச்சாம். ஆனால் Nelcy அக்கா ஓட Red rose மட்டும் ஒரு மறைவிடத்துல வேர் பற்றி பாதுகாப்பாக இருந்துச்சாம். இதேப் போல தான் தம்பி தங்கச்சி, காற்றும், புயலும் வேகமாக வீசிக்கொண்டு இருக்கிற இந்தப் பொல்லாத உலகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். மற்ற பூக்கள் மாதிரி நாம் வெளியில் இருந்தால் புயலில் அழிந்து விடுவோம். ஆனால் இந்த Red rose போல் "இயேசு கிறிஸ்து" என்கிற மறைவிடத்தில் இருக்கும் போது எந்தத் தீங்கும் நம்மை அனுகாது... தம்பி, தங்கச்சி, கர்த்தருக்குள் வேர் பற்றி உலகத்திற்கு எதிர்த்து நிற்க தயாரா?

**- Blessy**

# RESIST




Resist the devil and he will flee
One who wants to sin will somehow
find a way to sin
One who wants to stay away from
sin will somehow resist the sin
Run away from youthful lust says
Paul

**- Jenefar**

# எழுப்புதல் நட்சத்திரம்



**நீண்ட கால ஜெபங்களே நீண்டு நிலைத்து நிற்கும் எழுப்புதலை கொண்டு வருகின்றன.**

ஜெபம் என்ற பயிற்சி பள்ளியிலே கரை கண்ட தன் தகப்பனையும் தாண்டி ஓடி முன்னுக்கு வந்தவர் தான் ஜெப அப்போஸ்தலன் **John hyde** ஜான் ஹைடின் ஆத்துமாவின் இன்பமே அவரை அனுதினமும் தேவனோடு ஐக்கிய படுவதற்கும், தேவ சமூகத்திற்கும் இழுத்து சென்றது. இவர் இந்தியாவிற்கு வந்து பஞ்சாபில் ஊழியம் செய்த எழுப்புதல் ஜெப வீரன். எப்பொழுதும் ஜெபித்து கொண்டே இருப்பாராம்.

அவர் ஜெபிப்பதற்காக அடிக்கடி தன் நண்பன் வீட்டிற்கு சென்று விடுவாராம். அங்கு இருந்த ஜெப அறைக்குள் சென்று ஜெபித்து கொண்டே இருப்பாராம். அவருடைய நண்பர் இவர் என்ன தான் செய்கிறார், தண்ணீர் குடிப்பதில்லை, உணவு எடுத்து கொள்ளவில்லை என்ன தான் செய்கிறாரோ என்று பார்ப்பதற்கு அவருடைய நண்பர் உள்ளே சென்று அவர் ஜெபித்து கொண்டிருந்த அந்த அறையின் சுவற்றின் மீது காதுகளை வைத்து கேட்டாராம்... உள்ளே ஜான் ஹைடு பெருமூச்சு விட்டு ஏங்கி ஏங்கி அழுது ஜெபித்து கொண்டிருந்ததை பார்த்து, இப்படியும் ஒரு மனிதன் அழுது ஜெபிக்க முடியுமா என்று அதிர்ந்து போனாராம். ஒரு நாளுக்கு ஒரு ஆத்துமாவை தாரும் என்று கேட்க ஆரம்பித்து பின்னர் ஒரு நாளுக்கு நான்கு ஆத்துமாக்கள் தாரும் என்று கேட்டு அவர்களை கர்த்தருக்குள் நடத்திடுவாராம். தன் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் வரை மணிக்கணக்காக தேவ சமூகத்தில் விழுந்து கிடப்பாராம். சில நேரங்களில் 40 மணி நேரம் கூட முகங்குப்புற விடாபிடியாய் கர்த்தருடைய சமூகத்தில் இருப்பாராம்.

இந்தியாவின் பஞ்சாபில் அவர் ஊழியம் செய்த நாட்களில் நடந்த சம்பவம். மணிக் கணக்கில் தன்னுடைய ஜெப அறையில் நின்று முழங்காலில் கதறி விட்டு மேடைக்கு வந்த நின்றாராம் ஜான் ஹைடு. பேசியது 3 வார்த்தைகள் மட்டுமே... "ஓ! பரலோக பிதாவே"...

அவ்வளவு தான் அந்த மைதானமே கர்த்தருடைய தெய்வீக பிரசன்னத்தாலும், தேவ அன்பாலும் நிரப்பப்பட்டது. அநேகர் பாவ அறிக்கை செய்து கண்ணீரோடு மனந்திரும்பினார்கள். ஒரு மனிதனுடைய முழங்கால் முடக்கப்பட்டதால் எவ்வளவு பெரிய விளைவை பார்க்கிறோம். மணிக் கணக்காய் தனிமையில் தேவனோடு எந்த மனித முகங்களையும் பாராமல், மனித சத்தம் கேளாமல், அவருடைய முகத்தை மாத்திரம் பார்த்து அவருடைய சத்தத்தை மாத்திரம் கேட்டு ஜெப எழுப்புதலில் முக்கிய பங்கு வகித்தவர்.

உற்சாகமாக ஜெபிக்கிறவரானாலும், சரீரம் பெலவீனப்பட்டது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சொன்னார்கள், இவரது இருதயம் மிக மோசமான சூழ்நிலையில் உள்ளது. ஆனால் இந்த கேஸில் ஆச்சரியமூட்டும் ஒரு காரியம் என்னவென்றால் இடது பக்கத்திலிருந்த இருதயம் இயற்கையாகவே வலது பக்கத்துக்கு வந்து விட்டது என்றார்கள்... ஜெபத்தின் வல்லமை...

**ஒரு மாபெரும் மாற்றத்துக்கு நேரம் வந்து விட்டது...**
**தனிப்பட்ட வாழ்வில்... சபைகளில் தேசத்தில்...**

ரிக்டர் அளவுகளால் அளவிட முடியாத ஒரு ஆவிக்குரிய பூகம்பம் வெடித்தே ஆக வேண்டும்
அதின் காரண கர்த்தா நீயாக ஏன் இருக்கக்கூடாது?
ஆனால் அதின் விலைக்கிரயம் நீ நினைத்து பார்க்க முடியாத ஒன்று! "ஜெபம்"
**செலுத்த ஆயத்தமா?**

## கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

சேனைகளின் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் சேனை வீரர்களாகிய உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய அநாதி திட்டத்தின்படி ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தின் பொங்கல் விடுமுறை நாட்களில் திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி அருகேயுள்ள பாளையங்கோட்டை கிராமத்தில் உள்ள கிரைஸ்ட் கார்டன் வளாகத்தில் நமது வருடாந்திர கூடுகை நடத்தி வருகிறோம். கடந்த 2019 ஆம் ஆண்டில் ஒரு சிறு குழுவாக கூடி அந்த ஆண்டில் கர்த்தர் நம்மைக்கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறார் என்பதை அறிய இரண்டு நாட்கள் அவர் பிரசன்னத்தில் காத்திருந்து, திட்டங்களைப் பெற்று செயல்படுத்த துவங்கினோம். தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் எந்த வித தடையும் இன்றி இந்த கூடுகையை கர்த்தர் நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். அன்று சிறு கூட்டமாக துவங்கிய இந்த கூடுகை, இந்த ஆண்டில் ஜனவரி மாதம் 16 மற்றும் 17 தேதிகளில் திரள் கூட்டமாக பெருகி இருப்பதைக்கண்டு இருதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றி செலுத்துகிறோம்.

திருநெல்வேலி பட்டணத்தை சுற்றியுள்ள அநேகர் பங்குபெற்றது மட்டுமல்லாமல், கோயம்புத்தூர், ஈரோடு, சென்னை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, மதுரை போன்ற பல மாவட்டங்களில் இருந்து அநேகரை கர்த்தர் அழைத்துக்கொண்டு வந்தார். பங்குபெற்ற ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதமாய் கர்த்தர் சந்தித்து, தம் பணிக்கென்று சொல்லி அவர்களை உடைத்து, உருவாக்கி, உருமாற்றி அனுப்பியதை பார்க்கமுடிந்தது. இரண்டு நாள் கூடுகையின் ஒவ்வொரு பகுதிகளிலும் ஆவியானவர் பலமாய் இடைப்பட்டு, கிரியை செய்ததை அனைவராலும் உணர முடிந்தது. அந்நிய பாஷையின் அடையாளத்தோடு, ஆவியானவரின் அபிஷேகத்தை புதிதாக அநேகர் பெற்று பெலப்பட்டனர். வாலிபர்களுக்கான பிரத்தியேக மாதாந்திர இதழை (பரலோக வாசல்) முதல் முறையாக அச்சிட்டு ஜெபித்து பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை பாராட்டினார். முதல் முறையாக நம்முடைய ஊழியத்தின் சார்பாக நாட்காட்டி அச்சிட்டு ஜெபித்து வினியோகிக்க கர்த்தர் கிருபை பாராட்டினது கூடுதல் சிறப்பு. தேவ தாசனும், புதிய நம்பிக்கை தீர்க்கதரிசன திருச்சபையின் போதாகருமாய் இருக்கக்கூடிய சகோதரர் G.V. சரவணன் அவர்களை கர்த்தர் நம் மத்தியிலே அழைத்துக்கொண்டு வந்து பலமாய் பயன்படுத்தினார். அநேகர் கர்த்தருடைய வார்த்தையினால் இடைகட்டப்பட்டு, தங்களை தேவ இராஜ்யத்திற்க்கென்று ஒப்புக்கொடுத்து, திடமான தீர்க்கமான தீர்மானங்களோடு கடந்து சென்றனர். தீர்மானங்களோடு கடந்து சென்றவர்கள் தங்கள் பகுதிகளில் செயல்படக்கூடிய செயல் வீரர்களாய் எழும்பி, கோடி வாலிப ஆத்துமாக்களை சந்திக்கிற இந்த உன்னத பணியில் கூடி, தொய்வில்லாமல் ஓடி பயணித்திட தொடர்ந்து உங்கள் ஜெபங்களில் நினைவு கூறுங்கள்.











# Testimonies...



இந்த கூடுகைக்கு வருவதற்கு முன்பு வாழ்க்கையில் அநேக பிரச்சனைகள்... ஜெபிக்காமல் இருந்தேன். இந்த கூடுகைக்கு வந்த பிறகு அநேக ஆசிர்வாதத்தையும், அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டேன். எனக்குள் இருந்த தாலந்துகளை ஆண்டவர் உணர்த்தி, அவருக்காக இந்த தாலந்துகளை பயன்படுத்த கிருபை பாராட்டின கர்த்தருக்கு நன்றி.

- Jasmine, Viruthunagar.



நான் first time இந்த meeting attend பண்ணேன். என்னோட ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமாய் இருந்தது. இயேசப்பா என்மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை புரிந்து கொண்டேன். இயேசப்பா அவங்களோட பாரத்தை என்கிட்ட சொன்னாங்க. இரட்சிக்கப்படாதவர்களுக்காக என்கிட்ட சொல்லி அழுதாங்க. உடனே எனக்கும் அழுகையாக வந்தது. இனிமேல் நான் இயேசப்பாவுக்காக வாழனும் என்று தீர்மானம் பண்ணியிருக்கிறேன். இயேசப்பாவின் அன்பை இயேசப்பா பற்றி தெரியாதவர்களுக்குசொல்ல வேண்டும் என ஆசைப்படுறேன். அவர் என்னோடு இருந்து அவர் சித்தப்படி என்னை நடத்துவார் என்று விசுவாசிக்கிறேன். - Gnana Jothi, Sankarankovil.



இந்த கூடுகைக்கு வருவதற்கு முன்பு சரீரத்தில் மிகுந்த பெலவீனத்தோடு வந்தேன். ஆனால், வந்த முதல் நாளிலே கர்த்தர் பரிபூரண விடுதலையை என் சரீரத்தில் கொடுத்து மிகுந்த உற்சாகத்தோடு கூடுகையில் கலந்து கொள்ள கிருபை செய்தார். இன்னும் ஆண்டவரோடு நெருங்கி உறவாடவும், அதிகமாய் வேதத்தில் நேரத்தை செலவிடவும் அர்ப்பணித்திருக்கிறேன்.

- Nancy, Tirunelveli.



எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்காக நிற்கவும், அவருக்காக எல்லாவற்றையும் செய்யவும் தீர்மானித்திருக்கிறேன். அவருடைய அளவில்லா அன்பை அதிகமாக உணர்ந்தேன்.

- Selva Jebadurai, Virudhunagar.



என்னை தாயின் வயிற்றில் இருந்து பிரித்தெடுத்து, பெயர் சொல்லி அழைத்த தேவனின் அழைப்பை திட்டமும் தீர்க்கமுமாய் அறிந்து கொண்டேன். என் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டது, ஆவிக்குரிய வாழ்வில் அடுத்த பரிணாமத்திற்குள் கர்த்தர் அழைத்து சென்றார். அழைத்தவரின் அழைப்பை நிறைவேற்ற அர்ப்பணித்திருக்கிறேன்.


- Thrusha, Madurai.

# BIBLE IN SCIENCE

ஒரு மரம் உயிர்வாழ தண்ணீர் ரொம்ப அவசியம், இந்த தண்ணீர் நிலத்தடியில் இருந்து மரத்தின் ஒவ்வொரு நுனிக்கும், வேரில் இருந்து Xylem வழியாக Gravity எதிர்த்துப் போகனும்.

இப்படி இது Gravity-ஐ எதிர்த்து மேலே போகிறதற்கு நிறைய காரணம் இருக்கிறது. Ex. Transpiration, Water potential, root pressure etc... இதுல ஒரு காரணம் தான் Adhesion and Cohesion. Adhesion - water molecules and Xylem நடுவில் இருக்கும் ஈர்ப்பு (attraction between unlike molecules)

Cohesion இரண்டு water molecules நடுவில் hydrogen bonding மூலமாய் இருக்கும் ஈர்ப்பு (attraction between like molecules) இந்த ஈர்ப்பின் மூலம் தான் தண்ணீர் கீழே வராம gravity-ஐ எதிர்த்து மேலே நோக்கி செல்கிறது. இதே போலத்தான் நம்ம வாழ்க்கையிலும், நம்மை கீழே தள்ளுகிற காரியங்களை எதிர்த்து நிற்க பரிசுத்த ஆவியானவரோடு நல்ல bonding இருக்கனும், நல்ல ஆவிக்குரிய ஐக்கியமும் தேவை. அப்போ தான் உலகத்தையும் அதின் ஆசை இச்சையையும் எதிர்த்து நிற்க முடியும்.




- Thrusha




**Meeting ID: 766 799 5892**

**Passcode: 1CRORE**

புதிய நாளில் புதிய கிருபைகளை பெற்றிட, புதிய நாளைத் தந்த கர்த்தரின் பாதத்தில் அந்நாளை துவங்கிட, நித்தியத்தில் நம்மை நிலை நிறுத்தும் நித்திய வார்த்தைகளை கேட்டிட அதிகாலையில் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்...

இயேசுவை அறிந்தவர்களாய், தொழுதுகொள்கிறவர்களாய் மாத்திரம் அல்ல, அவருக்காய் வாழ்ந்திட அவரைப்போல வாழ்ந்திட, இயேசுவைப்போல நாமும் உருவாக்கப்பட மாலையில் எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்...





Reg.No. 4/46/2019



Regd.Office :428,7th Middle Street, Thiagarajanagar, Tirunelveli - 627011

Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org Web: www.endtimewarriors.in


Follow us on: